எரிசக்தித் (சி3) துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9.

**அரசு கடிதம் (நிலை) எண். 106, நாள் 26.10.2010.**

அனுப்புநர்

திரு பி.டபிள்யூ.சி.டேவிதார், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

தலைவர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
19 A, ருக்மினி லக்ஷ்மிபதி சாலை (மார்ஷ்ல்ஸ் ரோடு),
எழும்பூர், சென்னை–600 008.

அய்யா,

பொருள் மின்சாரம் – விசைத்தறி நெசவாளர்களின் துணை நிறுவனங்களான வார்த்தல், திருகுதல் மற்றும் சுற்றுதல் தொடர்புள்ள நிறுவனங்களை இயக்கும் மின்நுகர்வோருக்கும் மின்சாரச் சட்டம் 2003–இன் பிரிவு 108 (1) –ன் கீழ் மின்கட்டணக் குறைப்பு மற்றும் இலவச மின்சாரம் முதலிய சலுகைகளை முறையே 01.02.2006 மற்றும் 01.08.2006 ஆகிய முன்தேதியிட்டு வழங்குவதற்கான கொள்கை முடிவு ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை

1. அரசு கடித (நிலை) எண்.23, எரிசக்தி (சி3)த் துறை, நாள் 01.03.2006.

2. அரசு கடித (நிலை) எண்.90, எரிசக்தி (சி3)த் துறை, நாள் 06.09.2006.

3. தலைவர், தமிழ்நாடு மின்வாரியக் கடிதம் எண்.CFC / Rev. / Dir / Tf.Cell / AEE / F.Subsidy-PL / D.317 / 2008, நாள் 17.06.2008 மற்றும் நாள் 22.01.2010.

-----

பார்வையில் காணும் கடிதங்களின் மீது தங்களின் கவனம் ஈர்க்க விழைகின்றேன்.

2. பார்வை ஒன்றில் காணும் அரசு கடிதம் (நிலை) எண். 23, எரிசக்தி (சி3) த் துறை, நாள் 01.03.2006–ல் அரசு குறைந்த அழுத்த மின் கட்டணம் III–A (2)–ன் கீழ் வரும் விசைத்தறி நெசவாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு மின்கட்டணச் சலுகையினை 01.02.2006

முதல் அளிப்பது தொடர்பான கொள்கை முடிவினை மின்சாரச் சட்டம் 2003–ன் பிரிவு 108 (1)–ன்படி எடுத்துள்ளதாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தெரிவித்தது:-

| அலகுகள் (Units) | மின்கட்டணம் / அலகு (Tariff Rate Per Unit) ரூ. பை. |
|---|---|
| இரண்டு மாதத்திற்கு 1000 அலகுகள் வரை | 1.00 |
| இரண்டு மாதத்திற்கு 1001 முதல் 1500 அலகுகள் வரை | 2.25 |
| இரண்டு மாதத்திற்கு 1501 மற்றும் அதற்கு மேலும் உள்ள அலகுகளுக்கு | 2.50 |

3. பார்வை இரண்டில் காணும் அரசு கடிதம் (நிலை) எண். 90, எரிசக்தி (ஏ1)த் துறை, நாள் 06.09.2006–ல் அரசு விசைத்தறி நெசவாளர்களுக்கு இரண்டு மாதத்திற்கு 500 அலகுகள் வரை இலவசமாக மின்சாரத்தை 01.08.2006 முதல் வழங்குவது தொடர்பான கொள்கை முடிவினை மின்சாரச் சட்டம் 2003–ன் பிரிவு 108 (1)–ன் படி எடுத்துள்ளதாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தெரிவித்தது.

4. தற்போது, பார்வை மூன்றில் காணும் கடிதத்தில், தலைவர், தமிழ்நாடு மின்சாரவாரியம் அவர்கள் அரசிடம், விசைத்தறி நெசவாளர்களுக்கு மின்சாரச்சட்டம் 2003–ன் பிரிவு 108–ன்படி அரசு கடிதம் (நிலை) எண். 23, எரிசக்தி (சி3)த் துறை, நாள் 01.03.2006–ல் மின் கட்டண குறைப்பு 01.02.2006 –முதல் முன் தேதியிட்டு வெளியிடப்பட்டது மற்றும் அரசு கடிதம் (நிலை) எண். 90, எரிசக்தி (ஏ1)த் துறை, நாள் 06.09.2006-ல் 01.08.2006 முதல் முன்தேதியிட்டு வெளியிடப்பட்ட இரண்டு மாதத்திற்கு 500 அலகுகள் வரை இலவச மின்சாரம் என்பது அவ்விசைத்தறிகளின் துணை நிறுவனங்களான வார்த்தல், திருகுதல் மற்றும் சுற்றுதல் தொடர்பான நிறுவனங்களை நடத்தும் மின்நுகர்வோர்களுக்கும் முறையே 01.02.2006 மற்றும் 01.08.2006 முதல் பொருந்தும் என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு தெரிவிக்கும்படி கோரினார்.

5. மேற்காணும் சூழலில், தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்களின் கோரிக்கையினை அரசு நன்கு ஆராய்ந்து, விசைத்தறி நெசவாளர்களுக்கு மின்சாரச்சட்டம் 2003–ன் பிரிவு 108–ன்படி அரசு கடிதம் (நிலை) எண். 23, எரிசக்தி (சி3)த் துறை, நாள் 01.03.2006–ல் மின் கட்டண குறைப்பு 01.02.2006 –முதல் முன் தேதியிட்டு வெளியிடப்பட்டது மற்றும் அரசு கடிதம் (நிலை) எண். 90, எரிசக்தி (ஏ1)த் துறை, நாள் 06.09.2006–ல் 01.08.2006 முதல் முன்தேதியிட்டு வெளியிடப்பட்ட இரண்டு மாதத்திற்கு 500 அலகுகள் வரை இலவச மின்சாரம் என்பது அவ்விசைத்தறிகளின் துணை நிறுவனங்களான வார்த்தல், திருகுதல் மற்றும் சுற்றுதல் (Warping. twisting and winding) தொடர்பான நிறுவனங்களை நடத்தும் மின்நுகர்வோர்களுக்கும் முறையே 01.02.2006 மற்றும் 01.08.2006 முதல் பொருந்தும் என ஆணையிடுகிறது.

6. தலைவர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அவர்கள், இவ்வாணையினை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மேல் நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இக்கடிதம், நிதித்துறையின் இசைவு, அ. சா. எண்.50641/Fin(Ind)/2010, நாள் 22.09.2010–ன்படி வெளியிடப்படுகின்றது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

அரசு முதன்மைச் செயலாளருக்காக.

__நகல்:-__

தலைவர், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை–2.
கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் காதி துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அமைச்சர் (மின்சாரம்) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
இயக்குநர், கைத்தறி மற்றும் ஜவுளித்துறை, குறளகம், சென்னை–108.
அமைச்சர் (நிதி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச் செயலாளர் அலுவலகம், சென்னை–9.
எரிசக்தித்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.